**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் வருடம் பிப்ரவரி மாதம் 07 ம் நாள் சனிக்கிழமை**

**I.A.No.02/2025**
**in**
**O.S.No.10/2021**

முனிசாமி வகையறா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

V.பேச்சி வகையறா ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக இன்று 02.02.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.தர்மர் அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் இறந்துபோன 6 ம் பிரதிவாதியான ஆராயியின் வாரிசை 11 ம் பிரதிவாதியாகவும், இறந்துபோன 7 ம் பிரதிவாதியான மொட்டையம்மாளின் வாரிசுகளை 12 முதல் 19 பிரதிவாதிகளாகவும் சேர்த்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி கட்டளை 1 விதி 10(2) சி.பி.சி.ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 6 ம் பிரதிவாதியான ஆராயி மற்றும் 7 ம் பிரதிவாதியான மொட்டையம்மாள் ஆகிய இருவரும் வெவ்வேறு தேதிகளில் காலமாகி

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.02.07 14:12:10 +0530

விட்டதாகவும், இறந்த விபரம் வழக்கில் ஆஜராகியுள்ள பிரதிவாதிகள் தெரிவித்த பிறகு தெரிய வந்தது என்றும், இறந்துபோன 6ம் பிரதிவாதியான ஆராயியின் ஒரே வாரிசு உத்தேச 11ம் பிரதிவாதி என்றும், இறந்துபோன 7ம் பிரதிவாதியான மொட்டையம்மாளின் வாரிசுகள் உத்தேச 12 முதல் 15 பிரதிவாதிகளும், வெள்ளையனும் என்றும், வெள்ளையன் காலமாகி விட்டதால் அவரது வாரிசுகள் உத்தேச 16 முதல் 19 பிரதிவாதிகள் என்றும், எனவே இறந்துபோன 6ம் பிரதிவாதிக்கு உத்தேச 11ம் பிரதிவாதியையும், இறந்துபோன 7ம் பிரதிவாதிக்கு உத்தேச 12 முதல் 19 பிரதிவாதிகளையும் பார்ட்டியாக சேர்க்கக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u> :

மனுவில் கூறியுள்ள காரணங்கள் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது என்றும், வில்லாயுதத்தேவருக்கு பேச்சியம்மாள்-1 (1-ம் பிரதிவாதி), பொட்டையம்மாள்-2 (7-ம் பிரதிவாதி), ஆராயி - 3 (6-ம் பிரதிவாதி), ராமசாமி-4 (2-ம் பிரதிவாதியின் கணவரும், 3 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தையுமாவார்) ஆகியோர் வாரிசுகள் என்றும், மேற்படியார்களில் ராமசாமி என்பவர் இறந்து விட்டதாகவும், அசல் வழக்கு மனுவில் கண்டுள்ள 1, 6, 7 பிரதிவாதிகளில் 1-ம் பிரதிவாதி பேச்சியம்மாள் கடந்த 09.10.2021-ம் தேதியும், 6-ம் பிரதிவாதி ஆராயி கடந்த 01.02.2020-ம் தேதியும், 7-ம் பிரதிவாதி பொட்டையம்மாள் கடந்த 30.03.2012-ம் தேதியும் இறந்து விட்டதாகவும், அதே போல் 6-ம் பிரதிவாதி ஆராயி என்பவருக்கு கருணாகரன் என்பவர் மட்டும் வாரிசு என்றும், ஷை கருணாகரன் என்பவர் கடந்த 1996-ம் வருடத்தில் இருந்து எங்கு உள்ளார் என்பது தெரியவில்லை என்றும், இறந்துவிட்ட 7-ம் பிரதிவாதி பொட்டையம்மாளுக்கு இளையக்காள்-1, சித்திரைவேல்-2 வெள்ளையன்-3, ஆறுமுகம்-4, கருப்பசாமி-5 ஆகியோர்கள் வாரிசுகள் என்றும், ஷையார்களில் வெள்ளையன் இறந்துவிட்ட நிலையில் வெள்ளையன் வாரிசுகளாக நாகவள்ளி-1, நம்புராஜன்-2, இளங்கோ-3, இளையபிரகாஷ்-4 ஆகியோர்கள் வாரிசுகளாக உள்ளதாகவும், அசல் வழக்கில் கண்டுள்ள 7 ம் பிரதிவாதியின் பெயர் பொட்டையம்மாள் என்றும், ஆனால் அசல் வழக்கிலும், மனுவிலும் மொட்டையம்மாள் என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்துக்கள் சம்பந்தமாக 1-ம் வாதியின் தந்தை வேலுச்சாமித்தேவர் என்பவர் 1,

SADHU SIVA
SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate,
Kadaladi.
Date: 2026.02.07 14:12:13 +0530

6, 7 பிரதிவாதிகள் மற்றும் 2-ம் பிரதிவாதியின் கணவரும், 3 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தையுமான ராமசாமி ஆகியோர்களின் தந்தை வில்லாயுதத்தேவருக்கு எதிராக இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்: 13/1991 வழக்கு தாக்கல் செய்து விசாரணை நடைபெற்று அந்த வழக்கில் வில்லாயுதத்தேவருக்கு ஆதரவாக கடந்த 30.09.1992-ம் தேதி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் வேலுச்சாமித்தேவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் A.S.No.939/1994-ஆக மேல்முறையீடு செய்ததில் ஷை மேல்முறையீட்டு வழக்கும் கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதிசெய்து வேலுச்சாமிதேவருக்கு எதிராகவும், வில்லாயுதத்தேவருக்கு ஆதரவாகவும் கடந்த 12.02.2007-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு விட்டபிறகு ஷை மேல்முறையீட்டு வழக்கு ஒரு தலை பட்சமாக தள்ளுபடி செய்யப்பட்டதை Set aside செய்யக்கோரி ஷை வேலுச்சாமித்தேவரின் வாரிசுகளில் உமையகுஞ்சரம், 1-ம் வாதி மற்றும் 10 நபர்கள் சேர்ந்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் காலதாமத மனு CMP(MD) NO: 5362/2023-ஆக தாக்கல் செய்ததில் ஷை காலதாமத மனுவும் முறையான விசாரணைக்கு பின்பு கடந்த 04.07.2025-ம் தேதி தள்ளுபடி ஆகிவிட்டது என்றும், விபரங்கள் அனைத்தையும் மறைத்து பிரதிவாதிகளின் பாத்திய அனுபவத்தில் உள்ள அ.வ.எண்: 13/1991 வழக்கில் கண்டுள்ள சொத்துக்கள் மீது சமூகம் நீதிமன்றத்தில் ஷை வேலுச்சாமித்தேவரின் வாரிசுகளில் ஒருவரான 1- ம் வாதியும், 1-ம் வாதியின் வாரிசுகளான 2 முதல் 6 வாதிகளும் சேர்ந்து அ.வ.எண்: 10/2021 மற்றும் அ.வ.எண்: 15/2021 என இரண்டு வழக்குகளை பிரதிவாதிகளுக்கெதிராக தாக்கல் செய்து வழக்கை நடத்தி வருவதாகவும், சமூகம் நீதிமன்றத்தில் வாதிகள் தாக்கல் செய்துள்ள இரண்டு வழக்குகளிலும் ஏற்கனவே இறந்துவிட்ட நபர்களை நன்கு தெரிந்தும் வழக்கில் கட்சியாக சேர்த்துக்கொண்டும், இறந்தவர்களின் வாரிசுகளை முறையாக சேர்க்காமலும் இரண்டு வழக்குகளையும் நடத்தாமல் காலதாமதம் செய்து வருவதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.02.07 14:12:17 +0530

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரியும், உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 6, 7ம் பிரதிவாதிகள் இருவரும் காலமாகி விட்டதாகவும், இறந்த விபரம் வழக்கில் ஆஜராகியுள்ள பிரதிவாதிகள் தெரிவித்த பிறகு தெரிய வந்தது என்றும், இறந்துபோன 6ம் பிரதிவாதியான ஆராயியின் ஒரே வாரிசு உத்தேச 11ம் பிரதிவாதி என்றும், இறந்துபோன 7ம் பிரதிவாதியான மொட்டையம்மாளின் வாரிசுகள் உத்தேச 12 முதல் 15 பிரதிவாதிகளும், வெள்ளையனும் என்றும், வெள்ளையன் காலமாகி விட்டதால் அவரது வாரிசுகள் உத்தேச 16 முதல் 19 பிரதிவாதிகள் என்றும், எனவே இறந்துபோன 6ம் பிரதிவாதிக்கு உத்தேச 11ம் பிரதிவாதியையும், இறந்துபோன 7ம் பிரதிவாதிக்கு உத்தேச 12 முதல் 19 பிரதிவாதிகளையும் பார்ட்டியாக சேர்க்கக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதியின் வாரிசுகளான 2 முதல் 6 வாதிகளும் சேர்ந்து அ.வ.எண்: 10/2021 மற்றும் அ.வ.எண்: 15/2021 என இரண்டு வழக்குகளை பிரதிவாதிகளுக்கெதிராக தாக்கல் செய்து வழக்கை நடத்தி வரும் நிலையில், நீதிமன்றத்தில் வாதிகள் தாக்கல் செய்துள்ள இரண்டு வழக்குகளிலும் ஏற்கனவே இறந்துவிட்ட நபர்களை நன்கு தெரிந்தும் வழக்கில் கட்சியாக சேர்த்துக்கொண்டும், இறந்தவர்களின் வாரிசுகளை முறையாக சேர்க்காமலும் இரண்டு வழக்குகளையும் நடத்தாமல் காலதாமதம் செய்து வருவதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிடப்பட்டது.

இம்மனுவை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கின் 6, 7 பிரதிவாதிகள் இருவரும் இறந்து விட்ட விபரம் மனுதாரருக்கு தற்போதுதான் தெரிய வந்ததாகவும், அதனை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி விபரங்கள் மனுதாரருக்கு நன்கு தெரிந்திருந்தும் வழக்கினை காலம் கடத்தும் நோக்கில் மனுவை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், அசல் வழக்கின் இறந்துபோன தரப்பினரின் வாரிசுகளை சேர்த்து வழக்கினை மேல்நடத்த வேண்டியது அத்தியாவசியம் என்பதாலும்,

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.02.07 14:12:21 +0530

அத்தியாவசிய தரப்பினரின் வாதங்களையும் கேட்டறிந்தால்தான் வழக்கில் முழுமையாக தீர்வு காணமுடியும் என்பதால் இறந்துபோன 6, 7 ம் பிரதிவாதிகளின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினரான சேர்த்து வழக்கினை மேல் நடத்துவதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

**மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 07.02.2026 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.02.07 14:12:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**
இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**
இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.02.07 14:12:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.